අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2023(2024)

අනුහුරු ප්‍රශ්න පත්‍රය
மாதிரி வினாத்தாள்
**Model Paper**

# පුරවැසි අධ්‍යාපනය
# குடியியற் கல்வி
# Civic Education



கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை 2023(2024) மாதிரி வினாத்தாள் I- II

අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri

62 | T | I, II

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය- 2023 (2024)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2023 (2024)
G. C. E. Ordinary Level Examination – Model paper - 2023 (2024)

පුරවැසි අධ්‍යාපනය I, II
**குடியியற் கல்வி I, II**
**Civic Education I, II**

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. "ஜனநாயக ஆட்சி அனைவரது உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி முறையாகும்" இக் கூற்றினை முன்வைத்த சிந்தனையாளர் யார்?
   (1) சீலர் (2) ஜே.ஆர்.லவல்
   (3) ஆபிரகாம் லிங்கன் (4) அரிஸ்டோட்டில்

2. கிரேக்க நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நேரடி ஜனநாயக பண்புகளுள் ஒன்று
   (1) அரசின் அதிகாரம் பகிரப்படாமை
   (2) நகர்ப்புற பெண்களுக்கு வாக்குரிமை காணப்பட்டமை
   (3) அரசியல் அதிகாரம் ஆட்சியாளர்களிடம் மாத்திரம் காணப்பட்டமை
   (4) தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் அனைவரும் பங்கு கொண்டமை

3. தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட பிரதான அளவீட்டு நியதிகள் இரண்டும் முறையே
   (1) பொருளாதாரம், கலாசாரம் (2) சனத்தொகை, இனம்
   (3) நிலம் , கலாசாரம் (4) நிலப்பரப்பு, சனத்தொகை

4. உலகம் ஒரு பூகோள கிராமமாக மாறுவதற்கான புரட்சிகர மாற்றம் ஒன்றினை ஏற்படுத்திய துறையாக அமைவது
   (1) நவீன விஞ்ஞான மற்றும் தொழினுட்ப வளர்ச்சி
   (2) சனத்தொகை வளர்ச்சி
   (3) சர்வதேச வர்த்தகம்
   (4) பொருளாதார வளர்ச்சி

5. பண்பாட்டு ரீதியான கடமைகளுள் ஒன்று
   (1) முதியோரை பராமரித்தல்
   (2) வரி செலுத்துதல்
   (3) சட்டத்தை பின்பற்றுதல்
   (4) பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல்

6. இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
   (1) 25 (2) 22 (3) 21 (4) 23

7. நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர்
   (1) சட்டமா அதிபர் (2) நீதி அமைச்சர்
   (3) பிரதம நீதியரசர் (4) ஓம்புட்ஸ்மன்

8. இரு சபை கொண்ட பாராளுமன்ற முறையை அறிமுகம் செய்த யாப்பு எது?
   (1) குறூமக்கலம் (2) டொனமூர் (3) சோல்பரி (4) கோல்புறூக்

9. அபிவிருத்தியை அளவிடும் பாரம்பரிய அளவை முறைகளுள் ஒன்று
   (1) பௌதீகவாழ்க்கைப் பண்புச்சுட்டெண்
   (2) தனி நபருக்கான தலா தேசிய உற்பத்தி
   (3) மனித அபிவிருத்தி சுட்டி
   (4) தொலைபேசிகளின் எண்ணிக்கை

10. 1945 இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட பாரிய அழிவானது மீண்டும் ஏற்படாது தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பு யாது?
   (1) ஆசியான் அமைப்பு (2) ஐக்கிய நாடுகள் சபை
   (3) நேட்டோ (4) வோர்சோ

11. சர்வதேச வர்த்தகத்தின்போது பயன்படுத்தப்படும் பண அலகு
   (1) பாகிஸ்தான் ரூபா (2) குவைட் தினார்
   (3) அமெரிக்க டொலர் (4) இந்திய ரூபா

12. இலங்கையருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மற்றும் சர்வஜன வாக்குரிமையை பெற்றுக்கொடுத்த யாப்புச் சீர்திருத்தங்கள் இரண்டினையும் முறையே காட்டும் விடை.
   (1) கோல்புறூக், குறூமக்கலம்
   (2) குறூமக்கலம், டொனமூர்
   (3) சோல்பரி, டொனமூர்
   (4) மனிங், மனிங் டெவன்சியர்

13. பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை அறிமுகம் செய்த யாப்பு
   (1) 1972 முதலாம் குடியரசு யாப்பு (2) 1947 சோல்பரி யாப்பு
   (3) 1931 டொனமூர் யாப்பு (4) 1978 இரண்டாம் குடியரசு யாப்பு

14. அநுராதபுர காலத்தில் பண்டுகாபய மன்னனால் கிராம நிர்வாகத்திற்காக கம்பார,காமினி போன்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தமை எதனை குறிக்கின்றது.
   (1) அதிகார மத்தியமயப்படுத்தல் (2) அதிகார பகிர்வு
   (3) அதிகார பரவலாக்கல் (4) அதிகார குவிப்பு

15. சமஷ்டி அரசுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத் தொகுதி
   (1) ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து
   (2) இந்தியா, பாகிஸ்தான், சுவிட்சர்லாந்து
   (3) ஐக்கிய அமெரிக்கா, கனடா, பாகிஸ்தான்
   (4) இந்தியா, இலங்கை, பிரித்தானியா

16. இலங்கையில் மாகாண சபைகளுக்கான ஆளுநர்களை நியமனம் செய்பவர் யார்?
   (1) முதலமைச்சர் (2) பிரதம நீதியரசர் (3) பிரதமர் (4) ஜனாதிபதி

17. பல்கலாசார சமூகமொன்றில் நல்லாட்சி நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஏற்படும் விளைவொன்று அல்லாதது.
   (1) உரிமைகள் உறுதிப்படுத்தப்படும்
   (2) ஏனைய கலாசாரங்கள் தொடர்பில் புரிந்துணர்வு ஏற்படும்.
   (3) மதபேதங்கள் வளர்ச்சியடையும்
   (4) மக்கள் குழுக்களுக்கிடையில் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படும்.

18. குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படும் குற்றச் செயலாக அமைவது
(1) விவாகரத்து (2) காணிப் பிரச்சினை (3) கொலை (4) ஒப்பந்த மீறல்

19. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுள் ஒன்று
(1) தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருத்தல்
(2) சமூக பாதுகாப்பு
(3) கல்வி பெறல்
(4) சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுதல்

20. வளி மாசடைதலுக்கு ஏதுவாக அமையும் இயற்கை காரணியொன்று அல்லாதது
(1) எரிமலை வெடிப்பு (2) குப்பை கூழங்கள் (3) மணற்புயல் (4) காட்டுத்தீ

21. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளுக்கான தொலைபேசி இலக்கம்
(1) 1918 (2) 1929 (3) 1919 (4) 1990

22. ஜனநாயக ஆட்சி முறை வெற்றி பெறுவதற்கு தேவையான காரணிகளுள் ஒன்று
(1) சமூகத்தில் பல்வகைத் தன்மை காணப்படல்
(2) நேர்மையானதும் தன்னிச்சையானதுமான தலைமைத்துவம்
(3) மாற்றமடையாத அரசியற் கொள்கை
(4) அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்

23. சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்புவதனால் கிடைக்கப்பெறும் விளைவொன்று அல்லாதது
(1) சர்வதேச நல்லுறவு வளர்ச்சியடைதல்
(2) கூலித்தொழிலாளர்கள் இணைத்துக்கொள்ளப்படல்
(3) புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாதல்
(4) புதிய தொழினுட்ப அறிவு பரிமாற்றப்படல்.

24. சோல்பரி அரசியல் யாப்பில் முக்கிய மாற்றமாக அமைந்தது.
(1) சிறுபான்மையினருக்கான உரிமைகள் வழங்கப்பட்டமை
(2) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை
(3) சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை
(4) பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை

25. ஐக்கிய நாடுகள் சபையில் இரத்து அதிகாரத்தினை கொண்ட நாடுகளுள் ஒன்று
(1) ஜப்பான் (2) இந்தியா (3) சீனா (4) இலங்கை

26. தென்னாசிய வலய நாடுகள் இணைந்து தோற்றுவித்த அமைப்பு
(1) சார்க் (2) ஆசியான் (3) கொழும்பு திட்டம் (4) பிம்ஸ்டெக்

27. நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்காக பயன்படும் மனித அபிவிருத்தி குறிகாட்டிகளை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி

(1) பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, எழுத்தறிவு, கல்வி, கொள்வனவு சக்தி
(2) பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, கல்வி, கொள்வனவு சக்தி
(3) எழுத்தறிவு, பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரண வீதம்
(4) மொத்ததேசிய உற்பத்தி, கொள்வனவு சக்தி, பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு

28. உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருக்கும் பொருளாதார முறை பின்வருவனவற்றுள் எது?
(1) முதலாளித்துவ பொருளாதாரம் (2) சமதர்ம பொருளாதாரம்
(3) சந்தைப் பொருளாதாரம் (4) கலப்புப் பொருளாதாரம்

29. அபிவிருத்தியடைந்த ஆசிய வலய நாடுகளுள் ஒன்று
(1) இலங்கை (2) சீனா (3) இந்தியா (4) ஜப்பான்

30. ஜனநாயக அரசொன்றில் இறைமை அதிகாரம் யாரிடம் காணப்படுகின்றது.
(1) நிறைவேற்றுத் துறை (2) பொது மக்கள்
(3) பாராளுமன்றம் (4) நீதிமன்றம்

31. அண்மைக்காலமாக யுத்த மோதலில் ஈடுபட்டு வரும் இரு நாடுகளும் முறையே
   (1) சிங்கப்பூர், மலேசியா
   (2) சீனா, சீனதைபே
   (3) இஸ்ரேல், பாலஸ்தீனம்
   (4) வடகொரியா, தென்கொரியா

32. 1978 அரசியலமைப்பின் படி பிரஜை ஒருவரின் அடிப்படை மனித உரிமை மீறப்படும் சந்தர்ப்பத்தில் அதனை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி.
   (1) சொலிசிட்டர் ஜெனரல்
   (2) நீதி அமைச்சின் செயலாளர்
   (3) நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்
   (4) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

33. 1980 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்ட சுற்றாடல் சட்டத்தின் மூலம் சுற்றாடல் தொடர்பாக இடம் பெறும் அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் செயற்படும் நிறுவனம்

   (1) வன பாதுகாப்பு திணைக்களம்
   (2) சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை
   (3) புவியியல் மற்றும் பாதுகாப்பு சபை
   (4) மத்திய சுற்றாடல் அதிகார சபை

34. சமூக வாழ்க்கை முறை என்ற வகையில் ஜனநாயகம் முக்கியத்துவம் பெறுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை மாத்திரம் கொண்ட விடைத் தொகுதி.
   (1) பிறர் கருத்துக்களை மதித்தல், உரிமைகளை அனுபவிப்பதன் ஊடாக கடமைகளை நிறைவேற்றல்
   (2) பிறர் கருத்துக்களை மதித்தல், சமத்துவம் பேணல், கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
   (3) வாக்குரிமை காணப்படல், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல், மக்களின் விருப்பின் பேரில் செயற்படல்.
   (4) உரிமைகளை அனுபவிப்பதன் ஊடாக கடமைகளை நிறைவேற்றல், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல், கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளல்.

35. மோதல் தீர்வு முறைகளுள் ஒன்றான கலந்துரையாடல் முறையின் பண்புகளுள் ஒன்று.
   (1) சட்டத்தன்மைக்கேற்ப தீர்ப்பு வழங்கப்படல்
   (2) முறைசாராத கட்டமைப்பை கொண்டிருத்தல்
   (3) அதிக செலவு மிக்கது
   (4) ஒரு தரப்பினருக்கு மாத்திரம் வெற்றி கிட்டுதல்

36. நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்கான மூன்று குறிகாட்டிகள் முறையே

   (1) குறைத்தல், தூய்மையான உற்பத்தி, தவறுகளை பூச்சியமாக்கல்
   (2) மீளப்பயன்படுத்தல், பசுமை உற்பத்திகள், மீள் சுழற்சி
   (3) தவறுகளை பூச்சியமாக்கல், மீளப்பயன்படுத்தல், மீள் சுழற்சி
   (4) குறைத்தல், மீளப்பயன்படுத்தல், மீள் சுழற்சி

37. சூழல் தொடர்பில் பிரஜையொருவருக்கு உள்ள கடமையாக அமைவது.
   (1) நுகர்வு தேவைக்கருதி தடையின்றி வளங்களை பயன்படுத்தல்.
   (2) தன்னுடைய விருப்பின் பேரில் வளங்களிலிருந்து உச்ச பயனை பெறுதல்.
   (3) சுற்றாடல் வளங்களை சிக்கனமாக பயன்படுத்தல்.
   (4) தமது தேவைகள் விருப்பங்களை அதிகரித்துக் கொள்ளல்.

38. சூழலிலிருந்து கிடைக்கும் சேவைகளுள் பொருளாதார உதவிச்சேவைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத் தொகுதி
   (1) நீர் மின்சாரம், காற்றுச் சக்தி, நீர்
   (2) நிலம், சூரிய ஒளி, புவி வெப்பம்
   (3) சூரிய ஒளி, காற்று, தாவரம்
   (4) நிலம், கணிய வளங்கள், தாவரம்

39. கீழே A மற்றும் B கூற்றுக்களை அவதானிக்குக

A. இயற்கையாக அமைந்த புவிச் சூழலின் அழிவிற்கு காரணமாகும் அனைத்துவிதமான மாசடையும் நிலமைகளும் சுற்றாடல் பிரச்சினைகளாக கொள்ளப்படும்.

B. சுற்றாடல் பிரச்சினைகளுக்கு இயற்கை செயற்பாடுகளும் மனித செயற்பாடுகளும் காரணமாகின்றன

இக்கூற்றுக்களுள்

(1) A கூற்றினை B கூற்று விளக்குகின்றது
(2) A கூற்று சரியானது B கூற்று தவறானது
(3) A கூற்று தவறானது B கூற்று சரியானது
(4) A, B கூற்றுக்கள் தவறானவை

40. உலகில் பலம் வாய்ந்த நாடுகளால் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் துறைகள் A நிரலிலும் அவற்றின் தாக்கங்கள் B நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றினை சரியாக பொருத்துமிடத்து கிடைக்கப்பெறும் விடையினை தெரிவு செய்க.

| **நிரல் A**<br>**அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் துறைகள்** | **நிரல் B**<br>**தாக்கங்கள்** |
|---|---|
| 1. சர்வதேச வர்த்தகம் | A. முதனிலை உற்பத்திகளுக்கு குறைந்த விலையை பெற்றுக் கொடுத்தல் |
| 2. கடன் மற்றும் உதவிகள் | B. கணிய எண்ணெய் விலையேற்றம் |
| 3. பொருளாதாரம் | C. பல்வேறு நிபந்தனைகளை விதித்தல் |
| 4. தேசிய பாதுகாப்பு | D. அதிக விலைக்கு ஆயுதங்களை விற்றல் |

(1) ACBD (2) ACDB (3) BACD (4) CDAB

ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය- 2023 (2024)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2023 (2024)
G. C. E. Ordinary Level Examination – Model paper - 2023 (2024)

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| **குடியியற் கல்வி** | **I, II** |
| **Civic Education** | **I, II** |

# குடியியற் கல்வி II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், வேறு நான்கு** வினாக்கள் உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

I. அரசாங்கத்தின் பிரதான துறைகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

II. ஓற்றையாட்சி முறையின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக

III. சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரிசின் பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்படும் பெயர்களை முறையே குறிப்பிடுக.

IV. அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

V. மோதல்கள் ஏற்படுவதற்கான அரசியற் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

VI. 1931 டொனமூர் அரசியலமைப்பின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

VII. இலங்கையின் மாகாணசபைகள் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த சட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

VIII. மனிதன் தனது உரிமைகளைப் பெற்றுக்கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக

IX. சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

X. சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் **இரு முறைகளையும்** குறிப்பிடுக. ($2 \times 10=20$புள்ளிகள்)

2. " உலகில் பெரும்பாலான அரசுகள் ஜனநாயக ஆட்சி முறையினையே பின்பற்றுகின்றன"

   I. நேரடி ஜனநாயக ஆட்சி முறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   II. ஜனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   III. A. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

   B. நீர் மேலே குறிப்பிட்ட பண்புகளுள் ஒன்றினைப் பற்றி சுருக்கமாக விளக்குக (2 புள்ளிகள்)

3. "தற்கால உலகில் பெரும்பாலான நாடுகளில் பல்கலாசார சமூகமே நிலவுகின்றது."

I. மிகவும் சிக்கலார்ந்த பன்மைபண்பாட்டு சமூகம் நிலவும் நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II. சமூக நீதி வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

III. A. பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B. மேற்குறிப்பிட்ட பண்புகளில் **ஒன்று** சமூக நலனுக்கு காரணமாக அமையும் விதத்தினை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

4. "மனிதர்கள் சமூகமாக இணைந்து வாழும் போது பல்வேறு தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன"

I. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தேவைகளுடன் இணைந்த விருப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக

அ. உணவு.

ஆ. வீடு (2 புள்ளிகள்)

II. கலப்பு பொருளாதார முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

III. A. உலகமயமாதல் காரணமாக இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள சாதகமான தாக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

B. மேற்குறிப்பிட்ட சாதக தன்மைகளில் **ஒன்றினை** பற்றி சுருக்கமாக விளக்குக (2புள்ளிகள்)

5. "மோதல்கள் பெரும்பாலும் தீமையான விளைவுகளையே தோற்றுவிக்கின்றன ."

I. மோதல்களின் பிரதான இரு பிரிவுகளும் எவை? (2 புள்ளிகள்)

II. மோதலின் பாதகமான விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

III. A. மோதலை தீர்க்கும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

B. மேலே நீர் குறிப்பிட்ட முறைகளுள் **ஒன்றினைப்** பற்றி விளக்குக (2 புள்ளிகள்)

6. "எந்தவொரு நாட்டிலும் நீதியை நிலைநாட்டுவதற்கு நீதிமன்ற கட்டமைப்பு ஒன்று காணப்படுகின்றது."

I. 1978 குடியரசு யாப்பின் படி நீதிமன்றத்தின் சுதந்திரத்தை பேணும் வகையில் வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II. இலங்கையின் நீதிமன்ற நடவடிக்கைகளின் சட்டம் தொடர்பிலான உயர்மட்ட பதவிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

III. A. இலங்கையின் பிரதான நீதிமன்றம் தவிர்ந்த பிணக்குகளை தீர்ப்பதற்கான மாற்று வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

B. நீர் மேலே குறிப்பிட்ட மாற்று வழிமுறைகளுள் **ஒன்றினைப்** பற்றி சுருக்கமாக விளக்குக (2 புள்ளிகள்)

7. "மகிழ்ச்சிகரமானதும் கௌரவமிக்கதுமான வாழ்க்கை முறை அனைத்து மனிதர்களுக்கும் உரித்துடையதாகும்"

I. தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பின்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

II. சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் அடிப்படை நியதிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

III. A. பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

B. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுள் ஒன்றினைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | **අ. පො. ස. සාමාන්‍ය පෙළ** **2023(2024)**

# மாதிரி வினாத்தாளுக்கான விடைப்பத்திரம்
# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය
# Answers sheet for the Model paper

# පුරවැසි අධ්‍යාපනය
# குடியியற் கல்வி
# Civic Education



**கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை 2023(2024) மாதிரி வினாத்தாள் I- II**

අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி அமைச்சு மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | 11 | 3 | 21 | 2 | 31 | 3 |
| 02 | 1 | 12 | 2 | 22 | 4 | 32 | 4 |
| 03 | 4 | 13 | 4 | 23 | 2 | 33 | 4 |
| 04 | 1 | 14 | 3 | 24 | 1 | 34 | 2 |
| 05 | 1 | 15 | 1 | 25 | 3 | 35 | 2 |
| 06 | 2 | 16 | 4 | 26 | 1 | 36 | 4 |
| 07 | 3 | 17 | 3 | 27 | 3 | 37 | 3 |
| 08 | 3 | 18 | 3 | 28 | 2 | 38 | 4 |
| 09 | 2 | 19 | 4 | 29 | 4 | 39 | 1 |
| 10 | 2 | 20 | 2 | 30 | 2 | 40 | 1 |

# குடியியற் கல்வி II

1.

I. சட்டத்துறை
நிறைவேற்றுத்துறை
நீதித்துறை.

II.

- அரசின் சட்டத்துறை, நீதித்துறை, நிறைவேற்றுத்துறை அதிகாரங்கள் மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படல்
- மத்திய அரசின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக சில அதிகாரங்கள் பிராந்திய நிர்வாக அலகுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
- மத்திய அரசின் சட்டத்துறையால் நிறைவேற்றப்படும் சட்டத்தின் மூலம் மாத்திரம் அதிகாரம் பண்முகப்படுத்தப்படல்.
- மத்திய அரசு தேவையான போது பண்முகப்படுத்தப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறல்.

III. கென்ரன்
மானிலம்

IV. எதனை எந்தளவு உற்பத்தி செய்வது?
எவ்வாறு உற்பத்தி செய்வது?
யாருக்காக உற்பத்தி செய்வது?

V. எல்லைப் பிரச்சினை
அதிகார பரம்பல்

VI. சர்வசன வாக்குரிமை
பிரதேசவாரி பிரதிநிதித்துவம்
நிர்வாக குழுமுறை
அரசுக்கழகம்

VII. 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் 13 ஆம் சட்ட திருத்தம்
1987ஆண்டு 42 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைச்சட்டம்

VIII. 1215 பிரித்தானிய மக்னா காட்டா உடன்படிக்கை
1289 பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய உடன்படிக்கை
1766 அமெரிக்க சுதந்திர பிரகடனம்
1789 பிரான்சிய பிரகடனம்
1917 ரஷ்ய புரட்சி

IX. இயற்கைகாரணிகள்
மனித செயற்பாடுகள்

X. இராசதந்திர உறவுகள்
விரதியல் உறவுகள்

2.

I. நிலப்பரப்பு விசாலமாக காணப்படல்
அதிக சனத்தொகை
சமூகதேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை
பிரஜைகளை ஓர் இடத்தில் ஒன்று திரட்ட முடியாமை

II. பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு அமைய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்
பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சிக்கே அதிகாரம் உரித்துடையது.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் விருப்பின் பேரிலேயே சட்டம் இயற்றப்படும்.

III. a.

- குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறுதல்
- தகுதியுடையோருக்கு வாக்காளராவதற்கும் வேட்பாளராவதற்குமான உரிமை காணப்படல்
- தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல் நடைபெறல்
- சுமுகமான சூழலில் தேர்தல் நடைபெறல்

b. மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்

3.

I. ஐக்கிய அமெரிக்கா
இந்தியா

II.

- அரசியல் அதிகாரம் முறையற்ற வகையில் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்
- அரச நிர்வாகம் வினைத்திறனற்று இருத்தல்
- அரச சேவை அரசியல்மயமாக்கப்பட்டிருத்தல்
- அரச கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்கேற்பு காணப்படாமை
- இலஞ்சம் மற்றும் ஊழல்கள் நிறைந்து காணப்படல்
- ஆட்சியாளர்கள் பொறுப்பு கூறாது செயற்படல்

III. a.

- தேசிய ஐக்கியம் மற்றும் சக வாழ்வு விருத்தியடைகின்றது.
- முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன
- அந்யொன்னிய தொடர்பும் நம்பிக்கையும் விருத்தியடைகின்றது.
- ஒரே தேசம் ஓரே நாடு என்ற உணர்வு ஏற்படுகின்றது.
- மனித சுதந்திரமும் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.
- நாட்டின் அபிவிருத்திக்காக சகல பிரஜைகளும் ஒன்று சேர்ந்து செயற்படுவர்

b. மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்

4.

I. உணவு:- சோறு, ரொட்டி, பிட்டு, இடியப்பம்…………………………
வீடு:- குடிசை வீடு மண் வீடு, மாடி வீடு……………………………..

II.

- உற்பத்தி காரணிகளின் உரிமை அரசு மற்றும் தனியார்துறையிடத்தில் காணப்படல்
- அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் அரசு தனியார் ஆகிய இரு துறைகளும் பங்கு கொள்ளல்
- சந்தை நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படுகின்ற போதிலும் அரசு இது தொடர்பாக தலையிடல்
- அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் என இரு பிரிவுகள் காணப்படல்
- பொது நலன்களை நிறைவேற்றுவது தொடர்பில் நலன்புரி பணிகளை மேற்கொள்வதில் அரசு தலையிடல்

III. a.

- வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழிநுட்பங்களின் உள்வருகை.
- வேலையுலகில் புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாவதனால் வேலையின்மை குறைவடைதல்
- தேசிய உற்பத்தி காரணிகளுக்கு அதிக கேள்வி உருவாதல்
- கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படல். (தரம் 10 பக்கம் 101)

b. மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்

5.

I. உள்ளக மோதல்
சர்வதேச மோதல்

II.

- உயிர்சேதம்
- சொத்து சேதம்
- வளங்கள் அழிவடைதல்
- மன அழுத்தம்
- பிளவுகள் ஏற்படல்
- அரசியல் உறுதிப்பாடு இன்மை

III. a.

- கலந்துரையாடல்
- காப்பாற்றுதல்
- இணக்கப்படுத்தல்
- தீர்ப்பு வழங்கல்
- வேண்டுகோள் விடுத்தல்
- ஆலோசனைகளை முன்வைத்தல்
- மத்தியஸ்தம் வகித்தல்
-

b. மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்

6.

I.

- நீதிபதிகளை நியமனம் செய்தல்
- நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்
- நீதிபதிகளின் வேதனம்
- வேறுபதவிகளை ஏற்றல்
- நீதிச்சேவை ஆணைக்குழுவை அமைத்தல்
- தேவையற்ற தலையீடுகள் கட்டுப்பாடுகளை குறைத்தல்

II. நீதி அமைச்சர்
பிரதம நீதியரசர்
சட்டமா அதிபர்

III.

a.

- பேச்சுவார்த்தை
- ஓம்புட்ஸ்மன்
- மனித உரிமைகள் ஆணைக்குழு

b. மேற்குறிப்பிட்ட ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்

7.

I.

- தாம் விரும்பும் மதத்தை பின்பற்றல்
- சித்திரவதை, கொடூரமான மனிதாபிமானமற்ற தண்டனைக்கு உட்படாமலிருத்தல்
- சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படல்
- இன, மத, மொழி,சாதி, பால் அரசியல் கொள்கை மற்றும் பிறப்பிட ரீதியாக வேறுப்படுத்தப்படாதிருத்தல் (தரம் 11 பக்கம் 74)

II.

- சிறுவர்களின் நலன்
- உயிர் வாழ்தலும், வாழ்வதற்கான உரிமையும்
- பங்கு கொள்ளலும் விருத்தியும்
- பாகுபாடின்றி நோக்கல்

III. a.

- மகளிர் அமைச்சு ஏற்படுத்தப்பட்டமை
- தேசிய மாதர் குழு அமைக்கப்பட்டமை
- பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்களை புதிதாக வரைவிலக்கணப்படுத்தியமை
- பெண்களுக்கு எதிரான கொடுமைகள் வீட்டு துன்புறுத்தல் பற்றி சட்டங்களை அமுல்படுத்தியமை
- அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் பெண்கள் அலகொன்றை ஏற்படுத்தியமை

b. மேற்குறிப்பிட்ட ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும்.